# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 12 வட்டாரங்களில் கீழ்காணும் விவரப்படி காலியாக உள்ள 28 வட்டார **ஒருங்கிணைப்பாளர்கள்** பதவிக்கு மாவட்ட அளவிலான போட்டித் தேர்வு மூலம் நிரப்பிடும் பொருட்டு, கீழ்கண்ட தகுதிகளின் அடிப்படையில் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**வட்டார ஒருங்கிணைப்பாளர் காலிப்பணியிடங்கள் விவரம்:**

| வ.எண் | வட்டாரத்தின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆனைமலை | 3 |
| 2 | அன்னூர் | 3 |
| 3 | கிணத்துக்கடவு | 3 |
| 4 | மதுக்கரை | 2 |
| 5 | பெரியநாயக்கன்பாளையம் | 2 |
| 6 | பொள்ளாச்சி (வடக்கு) | 2 |
| 7 | பொள்ளாச்சி (தெற்கு) | 3 |
| 8 | சர்கார்சாமக்குளம் | 2 |
| 9 | சூலூர் | 2 |
| 10 | சுல்தான்பேட்டை | 3 |
| 11 | தொண்டாமுத்தூர் | 3 |
| | **மொத்தம்** | **28** |

**1. வட்டார ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான வெளிசந்தைமுறையில் (Outsourcing) நியமனம் செய்யும் வழிகாட்டு நெறிமுறைகள்:**

**கல்வி தகுதி:**

- ஏதேனும் ஒரு துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் MS Office-ல் குறைந்தது 3 மாத சான்றிதழ் (3 months certificate Course) படிப்பு முடித்திருக்க வேண்டும்.

அல்லது

- கணினி அறிவியல் (Computer Science) அல்லது கணினி பயன்பாடுகள் (Computer Applications) துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
- முதுகலை பட்டப்படிப்பு மற்றும் அதற்கு மேல் படித்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது:

- 16.02.2026 ஆம் தேதியன்று 30 வயதிற்கு குறையாமல் இருக்க வேண்டும்.

அனுபவம்:

- மகளிர் சுய உதவிக்குழு (SHG)/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் (PLF) குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம் இருக்க வேண்டும்.

குடியிருப்பு:

- காலிப்பணியிடம் இருக்கும் வட்டாரத்தில் குடியிருக்க வேண்டும்.

நிபந்தனைகள்:

- இரு சக்கர வாகன உரிமம் பெற்றிருக்க வேண்டும்.
- நல்ல சாதனைப் பதிவை கொண்டிருக்க வேண்டும்.
- முன்னதாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) / புது வாழ்வு திட்டம் (PVP) / IFAD திட்டம் அல்லது வேறு எந்த மாநில அரசு திட்டங்கள் மற்றும் திட்ட அலகுகளில் நிர்வாக அல்லது நிதி முறைகேடுகள் காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவராகவோ அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக பணி நீக்கம் செய்யப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.
- தேர்வானவர்கள் குறைந்தது 5 ஆண்டுகள் பணிபுரியும் நிலையில் இருக்க வேண்டும். மேலும், இப்பணி முற்றிலும் தற்காலிகமானதாகும்.
- தேர்வானவர்கள் வெளிச்சந்தை அடிப்படையில் (Outsourcing) வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலம் நியமனம் செய்யப்படும்.
- மனுதாரரின் விண்ணப்பம் பரிசீலனை செய்யவோ அல்லது நிராகரிக்கவோ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் இறுதி முடிவாகும்.

**2. பணிநியமனத்திற்கான நெறிமுறைகள்:**

- காலிப்பணியிடங்கள் அனைத்தும் வெளிச்சந்தை முறையில் (Outsourcing) நிரப்பப்படும். தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றவுடன், மாவட்ட தேர்வுக்குழு மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, கல்வி, அனுபவ தகுதி மூலம் நேர்காணலுக்கு தேர்ந்தெடுக்கப்படும்.

மேற்காணும் தகுதி உள்ள விண்ணப்பதாரர்கள் **16.02.2026**-ஆம் தேதிக்குள் இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், 2-வது தளம், பழைய கட்டிடம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர் 641-018 என்கிற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**கோயம்புத்தூர்.**

5/2/26